**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி. PW – 1**

**OS.No.125/2014**

2022ம் ஆண்டு ஜீன் மாதம் 24ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.S.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல், மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் :திரு. எஸ்.பழனிசாமி தொழில் :

த/பெ. திரு.செல்லப்பன் வயது :

முகவரி :

**முதல் விசாரணை :**

முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

எனது தரப்பில் 28–12–1995ம் தேதியிட்ட என் பெயரிலுள்ள கிரைய பத்தரத்திரன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 06–11–2013ம் தேதியிட்ட என்னுடைய பெயரிலுள்ள சொத்து வரி ரசீது அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 08–5–2014ம் தேதியிட்ட என் பெயரிலுள்ள மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 08–01–2014ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கிறஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும், நான் அனுப்பிய அறிவிப்பு பிரதிவாதிக்கு சார்பாகாமல் 11–01–2014ம் தேதியிட்டு திரும்பியுள்ளதற்கான கவர் வா.சா.ஆ.5 ஆகவும், ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று பிராத்திகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்...S.வடிவேல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.